பள்ளிதேவையா? பஜனைமடம்

தேவையா?

பட்டிக்கும்—பள்ளிக்கும் பேதம் இல்லாத பரிதாபம்!

கல்வி மந்திரியின் கண்ணீரும்—கைவிரிப்பும்!

பள்ளி இடிகிறது—பஜனை மடம் எழும்புகிறது!

"இந்தப் பிரச்சினை, உண்மையில் என்னைக் குழப்பமடையச் செய்கிறது. குறிப்பாகச் சில பள்ளிக் கூடங்களில் கட்டிட வசதி செய்வது என்பது எனக்கு மண்டைக் குடைச்சலை உண்டுபண்ணுகிறது"

"மிருகப்பாதுகாப்பு (எஸ். பி. சி. ஏ.) சங்கத்தார் வழக்குத் தொடுக்கும் நிலையில், ஆடு மாடுகளைப் பட்டியில் அடைத்து வைப்பதைப்போல், சில பள்ளிகளில் நமது சிறுவர்கள் அடைத்து வைக்கப்படுகிறார்கள்."

"கிராமப்பகுதிகளில் தொடக்கப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் இட நெருக்கடியால் படும் அவஸ்தையைப் பார்ப்பதற்கே பயங்கரமாக இருக்கிறது. இது போன்ற பள்ளிகளிலும், நமதுசிறுவர்கள் படித்து வருகிறார்களே என்று, வெட்கப்படவேண்டியதாக இருக்கிறது."

✠

காஞ்சிபுரம் நெல்லுக்காரத் தெருவில், பல ஆண்டுகளாக வாடகைக் கட்டிடத்தில் நடைபெற்று வந்த, தேவள்ள இராமசாமி நடுநிலைப் பள்ளி, இருந்து வந்த கட்டிடத்தைக் காலிசெய்து விடவேண்டிய தாகி விட்டது. எனவே, இரண்டு இடங்களில் அந்தப்பள்ளியின் வகுப்புகளைப் பிரித்து நடத்த வேண்டிய நிலைஏற்பட்டது. சில வகுப்புகள் சத்திரத்திலும், இன்னும் சில வகுப்புகள் ஒரு கீற்றுக் கொட்டகையிலும் நடத்தப்பட்டு வந்தன. கீற்றுக்கொட்டகை போட்டு நீண்ட நாள் ஆகி விட்டதால, கொட்டகை பழுதுபட்டுப் போய், சென்ற வாரம் பிரிக்கப்பட்டுவிட்டது. அங்கிருந்த மேஜை நாற்காலிகளும் அப்புறப்படுத்தப் பட்டுவிட்டன. அங்கு படித்திருந்த மாணவர்களும் ஆசிரியர்களும் கண் கலங்கி நிற்கின்றனர்.

✠

காஞ்சீபுரத்தில் இலட்சுமி நாராயண பக்த ஜனசபைக்காக, ஒரு நகரசபை உறுப்பினர், மண் வாங்கி மண்டபம் கட்ட, காஞ்சி நகரசபைத்தலைவரும் சென்னை மேல் சபையின் உறுப்பினருமான டாக்டர் சீனிவாச ஐயர் அவர்கள் தேசியக் கொடியேற்ற, நகர சபை கமிஷனர் தோழர் நாராயண ஷெனாய் பி. ஏ. பி. எல்., திறப்புவிழாவாற்ற, ஸ்ரீ லட்சுமி சமேதராக ஸ்ரீமந் நாராயண மூர்த்தி மற்ற பரிவாரங்களுடன், புது மணி மண்டபத்தில் குடி புகுந்தார்.

✠

திருச்சிமலைக்கோட்டை தெற்குத் தெருவில் எழுந்தருளியுள்ள சம்பன்ன விநாயகர், வடிவேல், ஆஞ்சநேயர் ஆகிய மூன்று கோயில்களும் புதுப்பிக்கப்பட்டு, கும்பாபிஷேகம் செய்யப்பட்டது 11—9—49.

✠

தாம்பிரபரணி நதி குறுக்குத்துறை சுப்பிரமணியசாமி கோவிலுக்கு, இராஜ கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு, கும்பாபிஷேகம் 9—9—49-ல் நடைபெற்றது.

✠

குழப்பமடைகிறார்!

மண்டைக் குடைச்சல் கொள்ளுகிறார்!

வேதனைப்படுகிறார்!

வெட்கப்படுகிறார்!

கைகளையும் விரிக்கிறார்!

கல்வி அமைச்சர், கதறுகிறார், கண்ணீர் சொரிகிறார், பள்ளிகளிலே தேவையான கட்டிட வசதி இல்லாததால், மாணவர்கள் படும் அவஸ்தையைக் கண்டு, அலமறுகிறார். வயது வந்த மாணவர்கள் நிலைகண்டு அல்ல, அமைச்சர் இவ்வாறு கூறினது-குமுறினது!

இளஞ்சிறார்கள், பால்மணம் மாறாத பச்சிளம் குழந்தைகள், தொடக்கப் பள்ளிகளில், துன்புறும் காட்சி, அமைச்சரின் உள்ளத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. இரத்தக் கண்ணீர் விடுகிறார். கோவென்று கதறுகிறார். கொடுமை-இது கொடுமை என்று கூவுகிறார்! முகாரி பாடுகிறார்!

நிலை! பள்ளியில் பயிலும் நமது சிறுவர்களின் நிலை அதுதான். சித்திரம் முழுத்தன்மை பெற்றிருக்கிறது. அமைச்சர் அழுகிறார்! நாமும் அவருடன் சேர்ந்து அழுகிறோம்! மற்றவர்களையும் அவருடன், இப்பணி புரிய ஒத்துழைக்குமாறு தூண்டுகிறோம்! போதுமா இது! அமைச்சரின் பொறுப்பு-கடமை-மாணவச் சிறார்கள் பள்ளியில் படும் இன்னல்களை, எவர் உள்ளத்திலும் தைக்குமாறு, அழுது அழுது, எடுத்துக் காட்டி விடுவதினால் மட்டும், தீர்ந்துவிடுமா? அமைச்சரேகூட, ஏற்றுக் கொள்ளமாட்டாரே இதனை!

அவர் அமைச்சர். ஆளும் அதிகாரம் அவர் கையில் இருக்கிறது. வெறும் அன்னக்காவடி அல்ல! ஊர் சுற்றித் திரியும் நாடோடி அல்ல! அமைச்சர் அவர்! பொறுப்புள்ள பதவியிலே அமர்ந்திருக்கிறார். பள்ளிகளிலே சிறார்கள் படும் துன்பம், அவருக்குக் கொடுங் காட்சியாக இருக்கிறது. மனிதப் பண்பின் இலட்சணம் அதுதான். மாதவ மேனனார் மந்திரியாயினும், நம் போன்ற மனிதர்தானே அவரும்? இருக்காதா அவருக்கு அந்த அருங்குணம்? இருக்கிறது அவருக்கும்!

தானும், நம்மைப் போன்ற மனிதர்தான் என்ற, நன்கு காட்டிக்கொண்டு உள்ளார் மாதவ மேனனார், இந்த வேதனைச் சொற்களால். அவர் வெறும் தோழரல்ல- கனம்! வெட்டி ஆள் அல்ல- அமைச்சர்!

மாணவ சிறார்களின் நிலை கண்ட அவர் உதிர்த்த உருக்கமானச் சொற்கள், அவருடைய இரக்கச் சிந்தைக்கோர் எடுத்துக்காட்டாகிறது! அவ்வளவுதான்! அமைச்சரின் நிலையை அது எடுத்துக்காட்டவில்லை. அதற்கான சக்தி அந்தச் சொற்களுக்கு இல்லவும் இல்லை.

ஆடுமாடுகளைச் சிறு பட்டியில் அடைத்துத் துன்புறுத்தினால், துன்புறுத்துபவர்களை தண்டிக்க மிருகப் பாதுகாப்புச் சங்கத்தார் உள்ளனர். பள்ளிகளில் பயிலும் சிறுவர்களை-பச்சிளம் குழந்தைகளை-, துன்புறுத்துவோரை-நெருக்கடியான இடத்தில் நிறைய சிறுவர்களைப் போட்டு அடைத்துக் கொடுமை புரிவோரை, தட்டிக்கேட்க, குற்றஞ்சமத்தி வழக்கு நடத்த, தண்டித்துத் திருத்த, மேலும் அதே குற்றம் செய்யாமல் கண்காணித்துவர, ஆட்கள் இல்லையா? பலன் கருதாப்பணிபுரியு மனிதப் பண்பு பெற்றோர் இல்லையா? இரக்கச்சிந்தையினர் இல்லையா? வீரர்கள் இல்லையா? கொடுமையை எதிர்த்துப் போரிடும் நினைப்பும் துணிவும் கொண்டோர் இல்லையா? எனக் கேட்கிறார் அமைச்சர்-கல்வி மந்திரி-ஆடுமாடுகளுக்குக் கூட கேட்க ஆள் இருக்கிறதே என்று இடித்துக் கூறி!

இருக்கிறார்கள்! ஏராளமாக

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

விலை அரை அணா 4 பக்கம் Regd. No. M. 5458
Phone No. 4502

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (14—9—49) ✠ வெளியூர் (15—9—49) | இதழ் 36

காஷ்மீரில் உணவுப் பங்கீடு?

அதிகரிப்பதன் காரணம் என்ன?

காஷ்மீரின் எதிர்காலம் எப்படியாவது இருக்கட்டும். இன்று காஷ்மீர் இந்திய யூனியனில் ஒரு அங்கமாக இருக்கிறது. அங்கு உற்பத்தியாகும் அதிக உணவுப் பொருள்களில், பற்றாக்குறை மாகாணங்கள் உரிமை கொண்டாடுவதற்குப் பூரண உரிமை இருக்கிறது. காஷ்மீர் களத்தில், இராணுவச் செலவில் நமது வரிப்பணம், ஏராளமாகச் செலவாகிக் கொண்டிருக்கிறது. காஷ்மீரின்சீரமைப்புக்கு என்று, இந்தியயூனியனிலிருந்துகோடிக் கணக்கில் ரூபாய் கடனாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவையும் எண்ணிப்பார்க்கும் பொழுது, உணவுப் பொருளில் தட்டு இருக்கும் இந்நிலையில், காஷ்மீர் மக்களும், இந்திய யூனியனிலுள்ள மற்ற மக்களைப் போலத்தான், உணவில் பங்கீட்டை மேற்கொள்ள வேண்டும். அதனைத்தான் ஆளவந்தார்களும் அமுல் நடத்துவது முறை—ஒழுங்கு — அவசியம்

இதற்கு நேர் விரோதமாக காஷ்மீரின் தலைநகரில் உணவுப் பங்கீட்டின் அளவு கூட்டப்படுகிறது. மற்ற நகர் புறங்களில் இருந்து வந்த பங்கீடும் நீக்கப் பட்டு விட்டதாகவும், செய்தி வந்திருக்கிறது. குறைந்தவிலைக்கு தானியங்கள் கிடைப்பதாகவும், மேலும் குறைந்து விடக் கூடுமென்றும், அங்குள்ள உணவு அதிகாரிகுறிப்பிடுகிறார். இந்திய யூனியனில் உள்ள மற்ற மக்களை எல்லாம், உணவுப் பொருளை இறக்குமதி செய்வதை நிறுத்த வென்று காரணம் காட்டி, உபவாசம் இருக்கவும், வேறு காய் கிழங்குகளைத் தின்னுங்கள் என்றும் போதித்துவரும் ஆளவந்தார்கள், காஷ்மீர் பிரதேசத்தில் மட்டும்பங்கீட்டை அகற்றி விடுவது எந்த வகையில் நீதியானதாகும்? அங்கிருக்கும் மக்களை மட்டும் கொழுக்க வைத்து, மற்ற இடங்களில் உள்ள மக்களை எலும்பு உருவங்களாக ஆக்க எண்ணுவது தர்மமாகுமா? ஏன் இந்த ஓரவஞ்சனை! இச்செயலில் மறைந்து கிடக்கும் உண்மை தான் என்ன? விளக்குவார்களா விபரீதபுரி ஆட்சியாளர்கள்? விளக்கம் கூற மாட்டார்கள்!

மதம் போதிக்கும் 'நன்னெறி'

உடுமலைப் பேட்டைத் தாலுக்கா, கமுகரை கிராமத்தைச் சேர்ந்த கன்னிமுத்துக் கவுண்டன், தன் ஐந்து வயது மகனைத்தெய்வத்திற்கு நரபலி கொடுத்து விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளான். கன்னிமுத்துவின் கடவுள் பக்தி கண்ணை மறைத்து, மகனையே கடவுளுக்கு அர்ப்பணம் செய்யும் தியாகி ஆக்கி விட்டது போலும்! மகனை அறுத்துக் கறிசமைத்துக் கடவுளுக்கு விருந்து வைத்த பக்தர்களின் கதை நாட்டிலே மதத்தின் பேரால், கலையாக, காவியமாகப் படிக்கப் பட்டு, போற்றப் பட்டு, உயர்ந்த தத்துவமாக மதிக்கப் பட்டு வந்தால், அவற்றைக்கேட்டுக்கேட்டுமனத்திலபதிய வைக்கும் பகுத்தறிவூட்டும் படிப்பில்லாப் பாமர மக்களின் மனநிலை அப் பக்தர்களின் போக்கைப் பின்பற்று மாறு தூண்டத்தானே செய்யும்.

நரபலி, மிருகபலி, விபசாரம், சூது, பொய், களவு, பிறர் மனைவி விழைதல்போன்றஎண்ணற்றஒழுங்கீனங்கள் தெய்வத்தின் பெயரால் மதத்தின் பேரால் இந்நாட்டிலே மனம் போனபடி தங்குதடையின்றி பிரசாரம் செய்யப்பட்டு வருகிறதே அரசாங்கம் தடை செய்ய முனைந்ததுண்டா? பள்ளிகளிலே, இத்தகைய ஆபாசக்கதைகள் மதக்கல்வியாக, காவியமாக இன்றளவும் கற்பிக்கப் பட்டு வருகிறதே, அரசாங்கம் தடை செய்ததுண்டா?

இத்தகைய இழிந்த தத்துவங்கள் வேரூன்றிப்போன மனநிலையுடைய மக்கள், குற்றச் செயல்களை மதத்தின் பெயரால் செய்துகொண்டு இருக்கத்தானே செய்வார்? கண்டுபிடிக்கமுயன்றவரை குற்றம் செய்தவர்களைத் தண்டித்து விட்டால் போதுமா? குற்றமேசெய்யாத மனநிலை உண்டாக்க, எதன் பேராலும் நாட்டவர் மனத்தில் தீய ஒழுக்கம் பதியாத படி தடுக்க அரசாங்கம் முயல வேண்டாமா?

திருந்திய திருமணம்

திண்டிவனம், செப், 11.

தோழர் ஈ.பெருமாள்சாமிக்கும், தோழியர் சுசிலாவிற்கும் சீர் திருத்த திருமணம் திண்டிவனத்தை அடுத்த தாதாபுரம் கிராமத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி தோழர் மு. கிருட்டின மூர்த்தி அவர்கள் வாழ்த்து மடல் ஒன்று வாசித்தார்கள்.

மாலை மணி

சென்னை 14—9—49 புதன்கிழமை

நேரு விரும்பும் :: புதிய சமுகம்

காங்கிரஸ் அரசாங்கத்தினுடையவும், காங்கிரஸ்காரர்களுடையவுமான குற்றங் குறைகளைச் சுட்டிக்காட்டி, அவர்கள் திருந்தவேண்டிய வழிவகைகளைக் கூறுவதோடு நின்றுவிடும் பான்மையர் அல்லர் நாம், அவர்கள் சொல்லிலேயும், செயலிலேயும் குணம் காணும்போது, அது குறித்துப் பாராட்டி மகிழ்ச்சி தெரிவிப்பதும் நம் பண்பாகும்,என்பதைப் பல தடவைகளிலும் காட்டி வந்திருக்கிறோம்.

நல்லவை எவையோ அவற்றிற்கு ஆதரவு தருவதும், தீயவை எவையோ அவற்றை நீக்குவதும், கண்டிப்பதும் பண்புடையார் கடமை அல்லவா!

பண்டிதநேரு அவர்கள் டில்லி மாணவர் மாநாட்டில் பேசும்போது, பாராட்டி வரவேற்கக்கூடிய வகையில் சில பல கருத்துக்களைக் கூறியுள்ளார்.

"மாணவர்கள் தனிப்பட்ட முறையில் எந்தவிதமான அரசியல் கருத்தைக் கொள்ளவோ அல்லது எந்தவிதமான அரசியல் கட்சியில் சேரவோ செய்யலாம். ஆனால், 'மாணவர் இயக்கம்' அரசியல் கட்சித் தொடர்பு கொள்ளாது. விலகி நின்று, கல்வி, பண்பாடு வளர்ச்சிகளுக்குப் பாடுபடுவது நல்லது"

என்று தோழர் ஜவஹர்லால் நேரு மொழிந்துள்ளார். நல்ல கருத்து- வரவேற்கத்தக்க கருத்து-பாராட்டி மகிழத்தகக கருத்து. இந்தக் கருததைத்தான் காங்கிரஸல்லாத பேரறிஞர்கள் பலரும், இதுநாள்வரையில் எடுத்துக் கூறிவந்தனர். இப்போது பண்டித நேரு கூறுகிறார்! அது வரையில மகிழ்வதற்குரியது தானே!

மாணவர் இயக்கத்தைத் தனித்து நிற்கவிடாமல் தடுத்து, அதனை அரசியலில் கலக்கச்செய்து, அதன் தூய்மைத் தன்மையைக் கெடுத்தவர்களே காங்கிரஸ் தலைவர்கள்தான். இந்நாட்டில் மாணவர்களின் வாழ்வு வளம்படாமல் பாதிக்கப்பட்டுப் போனதற்குக் காரணம், பள்ளி வாழ்வைவிட்டு வெளிவரச்செய்து, தங்களுக்கு எடுபிடிகளாக அவர்களை இருக்கும்படி காங்கிரஸ்காரர்கள் செய்ததேயாகும். திறமையுள்ளவர்களை உற்பத்தியாக்கும் சாதனம் பழிக்கப்பட்டது-பகிஷ்கரிக்கப்பட்டது. அதன் காரணமாக, வெள்ளையன் காலி செய்துவிட்டுச் சென்ற இடத்தில் அமர்த்தத், திறமையுள்ள ஆட்கள் இல்லாத நெருக்கடியை,ஏற்கவேண்டிய அவசியம் காங்கிரஸ் கட்சியினர்க்கு ஏற்பட்டுள்ளது அதனால்தான், வெள்ளையர் ஆட்சிக் காலத்திலே தாசர் என்று தூற்றித துரத்திய பலரையும, வேண்டி வேண்டி வேலைக்கமர்த்திக்கொள்ளும் நிலை, இன்றைய காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இநத நிலையை நேரு நன்கு உணர்கிறார் என்று தெரிகிறது; ஆகவேதான, மாணவர்கள் 'இயக்கமாக' நின்று அரசியலில் கலக்கக் கூடாது என்று கூறுகிறார் எனக் கருதவேண்டியிருக்கிறது!

கருதது என்னவோ நல்ல கருத்துதான்; ஆனால் தோழர் நேரு இப்பொழுது கூறுவதற்குக் காரணம், இதுவரையிலே காங்கிரஸுக்குப போராட்டக் காலஙகளிலெல்லாம் பயன்பட்டுவந்த ஒரு இளைஞர் இயக்கம், காங்கிரஸுக்கு மாறுக விளங்கும வேறுபல கழகங்களுக்குப் பயனபடும் நிலை வந்துவிட்டதே, அத்தகைய ஒரு வாயப்பு வேறறுக கழகங்களுக்குக் கொடுக்கக் கூடாது என்ற கருத்திலேதான், பண்டிதநேருவால் இது கூறப்பட்டதாகும் என்று கொள்ளுவதற்கு உண்மையிலேயே இடம் இருக்குமாயின், அந்த மனப்போக்கு கண்டிக்கப்படவேண்டியதே யாகும். நம்மைப்பொறுத்த வரையில், மாணவர்கள் அரசியல் பயிற்சிபெறுபவர்களாக இருக்க வேண்டும், ஆனால் அரசியல் கட்சியின நேரடி நடவடிக்கைகைகளில், அவர்கள் பங்கு பெறுபவர்களாக இருக்கக் கூடாது என்பதேயாகும். அந்தக்கருத்து, நேருவால் உண்மை நோக்கோடு வற்புறுத்தப்படுவதாகக் கொள்ளப்படுமானல், அது வரவேற்கத்தக்கது என்கிறோம்.

பண்டிதநேரு தொடர்ந்து பேசும்போது, மாணவர்களின் கடமைகளை நன்கு வற்புறுத்தியுள்ளார். குடிசைத் தொழிலையே போற்றி வரும் காங்கிரஸைச் சேர்நத பண்டிதர் விஞ்ஞானத்தின் அவசியத்தை வறபுறுத்தி, அதனைப் பயன் படுததவேண்டிய முக்கியத்துவததையும் விளக்குகிறார் என்றால், அது உள்ளபடியே ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியதுதான் என்றாலும், நம்மால் வரவேற்கக் கூடியதாகத்தானிருக்கிறது.

கைராட்டையை மறந்து—தன் மேலேயிருக்கும் கதர்ச் சட்டையை மறந்து—விஞ்ஞானத்தைக் கேலி செய்து பழைமையைப் போற்றி வரும 'திருப்பிரம்மங்களின்' உருவங்களை மறந்து-உண்மை நெறியில் நின்று, சிறிதுநேரம் பேச, தோழர் நேருவுக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது, என்று ஊகித்தறிய வேண்டியிருக்கிறது.

பழைமையில் கிடந்து உழலும் மாணவர்களைப் புதுமையுலகில் கொண்டுபோய் நிறுத்த, பண்டித நேரு முயலுகிறார். அதுபல வைதிக-தேசிய காங்கிரஸ தோழர்களுக்குக் கசப்பைத் தரும்-ஆனல புத்துலகச் சிற்பிகளுக்கு இனிப்பைத்தரும அரும் மருந்து அவர் கொடுப்பது. இதோ அது;

"மாணவர்கள் அறிவைப்பெற ஆவலுற வேண்டும். புதியவொன்றைக்காணும் ஆராய்ச்சியில் அவர்கள் மூழ்கவேண்டும். அப்படி யிருந்தால்தான், மாணவர் என்ற சொல்லுக்கு ஏற்ற பொருளுடையராகக் கருதப்படுவார்கள்.

மாணவர்கள் தங்களுடைய இளமை புணர்ச்சியை இழந்துவிடும் அளவுக்கு, சமுக வழக்கங்களிலும், பழைய, பயனற்ற பழக்கங்களிலும் மூழ்கிக்கிடக்கிறார்கள்.

புதியது காணும் முயற்சி மாணவர்களிடையே பட்டுவிட்டது நாடு வளம்பெற்று விளங்க வேண்டுமானல், அந்த உணர்ச்சி அவர்களிடத்தில் துளிர்விடுதல் வேண்டும்.

விஞ்ஞானம் மிகச்சிறந்த குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகளை உண்டாக்கியிருக்கிறது. மக்களின் நலத்திற்கு அவற்றைப் பயன்படுத்தும் விதத்தை மக்கள் அறிந்துகொள்ளாதவர்களாகவேஇருந்துவருகிறார்கள். இந்த அறிவைப் பெரும்பாலான அளவுக்கு மக்களிடம் புகுத்த மாணவர்களால் முடியக்கூடும். மாணவர்கள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் மூலமாகச் சமுகத்திலே புரட்சியுண்டாக்கப் பாடுபடவேண்டும்."

மாணவர்கள் பழைமையிலே மூழ்கியிருக்கிறார்கள்—பயனற்றப பழக்க வழக்கங்கள் அவர்களுடைய துடிதுடிப்பு உணாச்சியை மழுங்கச் செய்து விட்டன—நாடு முன்னேற அந்த உணர்ச்சி தேவை—விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள மக்களுக்குப் போதிய அறிவில்லை-விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் மூலம் பாடுபட மாணவர்கள் முன்வரவேண்டும்; இவை இந்திய துணைக்கண்டத்தின் முதல் மந்திரியாரால் வற்புறுததப்பட்டுள்ளன. இத்தக கருத்துக்கள் சொல்லளவிலே காற்றில் கலந்து போய் விடாமல், இந்தக் கருத்துக்களின் அடிப்படையில, செயல்கள் உருவாக வேண்டும். பண்டிதரின் ஆட்சியின் கீழ் இருக்கும் அரசாங்கமும், அவர் தொடர்பு கொண்டிருக்கும் காங்கிரஸும் அப்படிப் பட்ட நல்ல நிலைமைகள் உருவாக, தங்கள் திட்டங்களைத் தீட்டிக் கொள்வார்களா?

மாணவர்களுக்குப் பண்டித நேரு கூறியுள்ள அறிவுரைகள் நல்ல அறிவுரைகள் தான். அவைகள் செயலிலே கடைப்பிடிக்கப் பட்டால்தான் அதனல் மாணவர்களுக்கும் பலனுண்டு, நாட்டிற்கும் பலனுண்டு பழமை - வைதிகம் மூடப்பழக்கவழக்கம்-குருட்டு நம்பிக்கை இவைகளைப்போக்கும் முயறசியையும், விஞ்ஞானத்தை வளர்க்கும் முயறசியையும் மாணவர்கள் கடைப்பிடிக்குமுன், மந்திரிகளும், அரசாங்கமும் கடைப்பிடிக்கும் எண்ணங்கொண்டால் தான். நேரு விரும்பும் புதிய சமுகத்தைக் காணமுடியும். புரட்சி கொண்ட சமூகத்தை உருவாக்க மாணவர்கள் முன்வர வேண்டும், அதுவும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் மூலமாக உருவாக்க முன்வரவேண்டும் என்கிறார். உண்மை! புரட்சி சமுகத்தை உருவாக்க ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்தினல்தான், புதிய வாழ்வு உருவாகும். அந்தச் சூழ்நிலையை உண்டாக்க அரசாங்கந்தான் ஆவனபுரிய வேண்டும்!

அடக்குமுறையின் 'யானைப் பசிக்கு' அடுத்த பலி!

தூத்துக்குடியிலிருந்து மாதமிருமுறைத் திராவிடர்த் தமிழ் இதழாக வெளிவந்துகொண்டிருக்கும் "கிளர்ச்சி" யின் மீது 153 (a), 292 இந்தியன் பீனல் கோடு சட்டப் பிரிவின்கீழ், சென்னை அரசாங்கம் அடக்குமுறை நடவடிக்கைகளைத்தொடுக்க உத்தரவு பிறப்பித்துள்ளது. அடக்குமுறையின் "யானைப் பசி" இன்னமும் அடங்கவில்லை போலும். எப்பொழுது அடங்குமோ?........

'இந்தியன்' என்ற சொல்லுக்கு அத்தாட்சி!

ஹிந்தி எண்களை ஏற்றுக்கொள்வதா? அராபி எண்களை ஏற்றுக்கொள்வதா? என்ற பிரச்னை,இத்துணைக்கண்டத்து மக்களிடையே போர் பிரச்னையாக உருவெடுத்திருக்கிறது. தேவநாகரி எழுத்தில் உள்ள ஹிந்தி மொழியினல்தான் இந்திய தேசிய தனிச சிறப்பு ஏற்படும்? என்று வாதிக்கிறது வடக்கு. எண்ணும் ஹிந்தியாக இருக்கவேண்டும் என்பது, எந்த தேசியத்தைக் காப்பாற்ற என்பது விளக்கப்படவில்லை. சொநத மொழியில் உள்ளப் பற்று, பிறர் மீது ஆதிக்கம் செலுத்தவேண்டும என்ற அளவிறகு வெறியாக மாறிப்போய் இருக்கிறது. நாட்டு மக்களின் நலம் கருதுவோர் செய்கின்ற காரியமல்ல இது. அ. ங். சபையில் இது பற்றி350 திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாம்இரண்டு மூன்று பக்கங்கள் கூடக் கொண்டதாக இருக்கிறதாம் சில திருத்தங்கள். 'இந்தியன்' என்ற ஒரு தேசிய இனம் இத்துணைக்கண்டத்தில் இருக்கிறதா? இல்லையா? என்பதை உறுதிப்படுத்த, அரசியல்ஆக்க மன்றத்தின் நடவடிக்கைகளே நல்லதோர் சாட்சியாகும்.

தூங்குமடம்

12-9-49-ல் துவக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை காலைக் கூட்டமும் மாலைக் கூட்டமும் நடைபெறும் இடைவேளையில், 'தூங்கும் மடமாக' மாற்றப்பட்டு விட்டது. தட்பவெப்பம் தாக்காத, அந்த மணி மண்டபத்தில், உறுப்பினர்கள் உட்காரும் பீடங்களில், கைகால்களை நீட்டி நன்றாக உறங்கினர், சில உறுப்பினர்.

மன்றத் தலைவர் மண்டபத்திற்குள் வந்த பின்னரும், ஒருவர் தூக்க இன்பத்தில் திளைத்துக்கொண்டு இருந்தார். இந்திய தேசிய மொழி குறித்துத் தலைவர் முன்னுரை கூற எழுந்ததும், உறக்கத்தில் மூழ்கி இருந்த உறுப்பினரை, மற்றொருவர் உலுக்கிக் குலுக்கி எழுப்பினர்!

ஏன் இந்தக் குறை?

மேனாடுகளில் 3000 மக்களுக்கு ஒரு பல்வைத்தியர் விகிதம் இருக்க, நம்நாட்டில் 4 லட்சம் மக்களுக்கு ஒருவர் கூட இல்லை! இன்னும் 30 ஆண்டுகளுக்குள்ளாவது 80,000 பல்வைத்தியர்கள் ஏற்படுமாறுசெய்வது அரசாங்கத்தின் கடமை, என்று போர் கமிட்டி பரிவுரை பகர்ந்திருக்கிறது.

நம்நாட்டிலே, எந்தத் தொழில் பழகவேண்டுமானலும், படிக்க வேண்டுமானலும, மாணவன் பள்ளிக்கூட வாழ்க்கையில் 12 ஆண்டைக் கழித்தாகவேண்டும். பனனிரண்டு ஆண்டுகள் வரை மகத்தான செலவில் கல்வி பயின்ற பின்னரே, மற்றையகல்வித்துறைகளில், மாணவன் புகுந்து அங்குவேறு ஐந்தாறு ஆண்டுகளைக் கழித்து விட்டு, வெளிப்பட நேருகிறது.

இவ்வளவு நீண்ட காலம் படிக்கவும் இதற்கேற்படும் பெரும் பணச் செலவை ஏற்கவும் மக்களுட் பெரும்பாலோரால் முடிவதில்லையாகையால், எழுத்தறிவுடன் பள்ளி வாழ்வை முடிக்கவேண்டியவர்கள் பல்லோராயுளர்.

சீன—ஜப்பானியர்களைப் பாருங்கள். மக்களனைவரும் தொழில் தெரிந்தவர்கள்; தொழிலாற்றவல்லவாகள்; பல்வைத்தியமா? பலர் படித்துவிட்டு, நம்நாடுவரை வந்து பல்வைத்தியம் செய்து பொருளீட்டும் அளவுக்குத்திறன் பெற்றுள்ளனர்.

மேனாடுகளிலும் அப்படித்தான். மெட்ரிக்குலேஷன் படித்தவன், பாரிஸ்டர் படிக்கலாம்.

நம்நாட்டில் தச்சவேலை, தோல் தொழில் முதலியவற்றைக் கற்பதனலும் 12 ஆண்டுப் படிப்பு இருத்தல் வேண்டும். இந்நிலையில் தொழில் தெரிந்தவர்கள் பெருகுவது எப்படி முடியும்?

எனவே, 8 ஆண்டுகளில் மத்தியக் கல்வியை முடிக்கும் திட்டமிட்டு, இரண்டு மூன்று ஆண்டுகளில் தொழிற் பயிற்சி பெறும்வரையுள் கல்வித் திட்டத்தை மாற்றியமைத்தால். 17—18 வயதுகளில் மாணவர்கள் தக்க தொழில்களை அறிந்தவர்களாக வெளிவர முடியும்.

அதே போன்று, பல்வைத்தியம், பொது வைத்தியம், சட்டம், ஆசிரியத் தொழில் போன்ற வற்றினையும் தாய் மொழியில் பயிற்றுவித்து, காலத்தை வீணுக்காமல் இருந்தால், பலர் படிக்க முடியும். (அறுவைச் சிகிச்சை இஞ்சினியரிங் போன்ற பொறுப்பு மிகுந்த கல்விகளுக்கு வேண்டுமாயின் கால அளவு நீடிக்கலாம்) மேலும் படிப்பிற்கு ஆகும் பெருஞ்செலவு குறைக்கப்பட வேண்டும். இது. உடனடியாகக் கவனிக்கப்படவேண்டிய வட்கமாகும்

வகுப்புவாதம் ஒழியக் காமராஜர் கண்டுபிடித்தவழி

விருதுநகர், செந்திகுமாரநாடார் கல்லூரியில், திரு. காமராஜநாடார் பேசுகையில், "சாதி வித்தியாசங்களை விட்டவர்களுக்கே அரசாங்கப் பதவிகளை அளிப்பதில் முன்னுரிமை தரவேண்டும். வகுப்பு பேதங்களை ஒழிப்பதற்கு, கலப்புத் திருமண முறை ஓர் உறுதியான வழி. கலப்பு மணத்தால் ஏற்படும் குழந்தைகளுக்கே பதவி அளிப்பதில் அரசாங்கம் சலுகை காட்டுமென்று விதி செய்தல் வேண்டும்" என்று கூறினார். இவருடைய இந்த நல்ல யோசனைகளை வரவேற்கக் கூடியவைகளே. அரசாங்கம் இவ்வாறு செய்யத்தான் வேண்டும்.

இந்த நல்லயோசனைகளைக்கூறிய காமராஜர் சிந்தனையில், தன்மான இயக்கத் தத்துவங்கள் ஓரளவு புகுந்துவிட்டனவென்பது தெரிகிறது. ஆனாலுடனே "காங்கிரஸை" அவர் சுக்கத் தொடங்கிவிட்டார்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உத்தரவே, இம்மாகாண வகுப்புவாத உணர்ச்சிக்குக் காரணமென்றும், தற்கால வகுப்புப் பிரதிநிதித்துவ உத்தரவை ரத்து செய்து, அதனைக் குழிதோண்டி ஆழப்புதைக்கும்படி முதலமைச்சரைக் கேட்டுக்கொள்வதாகவும் பேசியிருக்கிறார்.

தம்மைக் காமராஜநாடாராகவே இன்னும் அழைத்துகொள்கிறார்!

இவற்றைப் பார்க்கும்போது, இவரைப் பீடித்துள்ள காங்கிரஸ் நோய், பகுத்தறிந்து சிந்தனை செய்ய இடந்தாதென்றும், சிறிதளவு சீர்திருத்தம் பேசியதற்குக் காரணம், விருதுநகர் மண்ணென்றும கருதுமாறு ஆயிற்று.

காமராஜர் சிந்தனை சக்தி உடையவராயிருந்தால், முதலில் தாமே சாதிப் பெயரை நீக்கியிருத்தல் வேண்டும். தம் செல்வாக்கிற்குட்பட்ட இடங்களில் எவரும் சாதிப் பெயருடன் இருக்க அனுமதித்திருத்தல்கூடாது; சாதிப் பெயரை நீக்குதல் மட்டும் போதுமா? மக்கள் மனத்திலிருந்தே சாதிக் கர்வம், சாதிப் பெருமை என்பவைகளை அகற்ற இவர் வேலை செய்திருக்க வேண்டும். செய்ததுண்டா, எனறேனும் ஒருநாளாவது? செய்தவர்களை யாவது, முட்டுக்கட்டையிட்டுத் தொல்லைதராமல் இருந்ததுண்டா?

வகுப்புவாதஉணர்ச்சிக்கு, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உத்தரவே காரணமென்று கூறும் இவருடைய அறியாமைக்கு என்னென்பது! வரகூர் கோயில் நுழைவைத்தடை செய்ய நீதிமன்ற மேறினரே பார்ப்பனர், அது வகுப்பு வாதமல்லவா? சாதிக்கர்வமல்லவா? தோழரே! அதற்கும வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவத்திற்கும் ஏதேனும் சிறு சம்பந்தமேனும் உண்டா?

நாட்டிலே, சிலர் தம்மை மற்ற அனைவரையும் விட உயர்ந்தவர்கள் என்று கருதிக் கொண்டு, கூறிக்கொண்டு, அதற்கான சின்னங்கள் சில வற்றுடன் திரிந்துகொண்டு, பிறமக்களை வெளிப்படையாகத் தாழ்ந்தவர்களாக மதித்து, நடத்தி, இழிவு படுத்தி வருவது இன்றும் நாட்டில் சாதாரணமாக நடைபெற்றுவரும் செயலாக இருக்கிறதே! தோழரே! இதற்கும் வகுப்பு வாரிப் பிரதி நிதித்துவத்திற்கும் சம்பந்தம் இருக்கிறதா? அல்லது இதைத்தடுக்க என்றேனும் ஒருநாளாவது நீரோ, காங்கிரஸ் அரசாங்கமோ முயற்சித்ததுண்டா?

வகுப்புவாரிப் பிரதி நிதித்துவம் வகுப்பு பேதத்தை வளர்க்கவில்லை. நாட்டிலுள்ள வர்ணசிரமதர்மம் என்பவையே வகுப்புப் பேதத்தைப் பன்னெடுங்காலமாக வளர்த்து வந்திருக்கின்றன. இன்றும வளர்த்து வருகின்றனவென்பதை அறியக் கலாசாலை அறிவுதேவையில்லையே; சாதாரணப் படிப்பில்லாப் பாமரனும் அறிந்து மனம் நொந்து வாடுமாறு இன்று காங்கிரஸ் ஆட்சியில் அவ்விருபேய்களும் தலைவிரித்தாடுவதைக்கொண்டே கண்டறியலாமே.

பின்னர் வகுப்புவாரிப் பிரதி நிதித்துவம் என்பதென்ன?

வர்ணசிரமமும், சனாதனமும் சேர்ந்து வளர்த்த வகுப்பு பேதக் கொடுமையின் காரணத்தால், அரசாங்க உத்தியோகங்கள், பள்ளிக்கூடங்கள், பிறமுக்கிய துறைகள், வாழ்க்கை நலத்துறைகள் ஆகிய அனைத்தையும உயர்சாதியாராகி விட்ட கூட்டம் கொள்ளையிட்டுப் பகிர்ந்து கொள்கிறதே! அக்கொள்ளையை நிறுத்தவந்த கருவியே, வகுப்புவாரிப் பிரதி நிதித்துவம் என்பதை உணரமுடியுமா?

வர்ணசிரமம் எப்படி வேலை செய்கிறதென்பதை அறிய நெடுந்தொலைவு சென்று அலையவேண்டாம். விவேகானந்தா கல்லூரி, இராம கிருஷ்ண உயர்நிலைப்பள்ளி, பி. எஸ். உயர்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி உயர் நிலைப்பள்ளி, போன்ற "உயர் சாதி" எனப்படுபவர்களின் அதிகாரத்திலுள்ள ஸ்தாபனங்கள் சில வற்றை நேரில் போய்ப்பாரும். அரசாங்க இலாக்காக்களைப் போய்ப்பாரும். நல்ல தெளிந்த இதயமும், உண்மையான நாட்டுப்பற்றும், மக்கள் அனைவரும் உயரவேண்டும் என்ற நல்லெண்ணமும் இருந்தால், வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் என்பதென்ன? அது இருக்கவேண்டுமா? ஆழக் குழிதோண்டிப் புதைக்கப்பட வேண்டுமா? என்பது விளங்கிப் போகும்.

ஆசிரியருக்கு முடங்கல்

ஆட்சி செய்வோர் உணரட்டும்!

ஐயா!

இலங்கை நாட்டில் வாழும் இந்தியர்கள், தம் சொந்தத் தாயகத்தில் வாழும் தம குடும்பத்திற்குத் தாம் பாடுபட்டு உழைத்துப் பெற்ற ஊதியத்தை அனுப்புவதென்றால் பெரும் திண்டாட்டம். இலங்கை சர்க்கார், இந்தியர்கள் இந்தியாவுக்குப் பணம் அனுப்பக்கூடாது என்று ஏற்படுத்திய சட்டம், இங்கே நமது 'பாரதப்பூமியிலே' உதித்த, இன்று ஆட்சிபுரியும் காங்கிரஸ் சர்க்காரிலே களிநடனம் புரியும் உத்தியோகக் கும்பலுக்கு, பணம்பறிக்கும் புதையல் சட்டமாக மாறிவிட்டது. எப்படியென்றால், இலங்கை சர்க்கார் இந்தியர்கள் பணம் அனுப்புவதென்றால் 29 நம்பர் பாரம் ஒன்றை வினியோகம செய்து அப்பாரத்தில் இந்தியாவிலுள்ள, அப்பார மனுதாரின் ஜில்லாக் கலெக்டர் கையெழுத்திட்டு, அம்மனுதாருக்கு, அவசியம் இலங்கையிலிருந்து பணம வரவேண்டும், இலங்கை வருமானத்தைத் தவிர, வேறு எவ்வித வருமானமும் அம்மனுதாருக்குக் கிடையாது, என்று சர்ட்டிபை செய்யவேண்டும். அப்படி வாங்கப்பட்ட பாரத்தார்தான் பணம அனுப்ப முடியும். இந்தச் சட்டம் இங்கே கீழ்த்தரப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு அதாவது பாரத்துடன் விசாரணைக்கு வரும் ரெவினியு இன்ஸ்பெக்டர், அதற்கு ஆமாம்சாமி போடும் முனிஸீபுகள், அதற்குத் தீபமும் பக்கத்தாளமும், போடும கிளார்க்கு பியூன்களுக்குப் பெருத்த பண வேட்டையாக விட்டது. காரணம், அந்த 29ம நம்பர் பாரத்தில் மேற்சொன்னவாறு எழுதி கையெழுத்திட்ட பாரம்ஒன்றுக்கு ரூ. பத்து தந்தால்தான்பாஸ் பண்ணமுடியும். அப்படித்தராவிட்டால், ஏதாவது ஒரு காரணத்தை வைத்து பாரம்மறுக்கப்படுமென்று வாய்க்கூசாது, மனந்தளராதுகேட்கிறார்கள். மாதம் முப்பது நாளும், நெற்றிவியர்வை சொட்டுச்சொட்டென விழத் தோலுரிக்கும்வெய்யிலும், தொடையிழுக்கும சேறுதனிலும், தேயிலைத் தோட்டங்களிலும், கூலிவேலைகள் செய்தும் உழைத்துழைத்து உருக்குலைந்து பத்தோ அல்லது, பதினைந்தோ மாதாமாதம சம்பாதித்து, அதைத் தம் ஏழைக்குடும்பத்திற்கு அனுப்பி, அந்த வருமானத்தையே "வானம் பார்த்த வயல் போல்" காத்து காலத்தைக் கடத்தும் ஏழைமக்கள் எங்கு போவார்கள், அந்த பத்து ரூபாய் கொடுத்து அப்பாரத்தைப பாஸ்பண்ண? பத்து ரூபா யிருந்தால் ஒரு மாத காலத்தை அரை வயிறுக்கஞ்சியுடனாவது கழித்து விடலாமென்று ஏகத்துடன் வாழும் எத்தனை ஏழை பாட்டாளிக் குடும்பம் எப்படி அநதப் பத்து ரூபாய் கொடுக்க முடியும்? நம் 'காருண்ய' சர்க்கார், 'நம்ம' சர்க்கார், 'லஞ்சப் பேயை ஒழிக்கப்போகின்றோம்' என்று வாய்குளிரக் கத்தும் நேரு சர்க்கார் இந்த விஷயத்தில் கவனம் செலுத்துமா? ஆயிரக்கணக்கில் வாழும் ஏழைக் குடும்பங்களின் இப் பரிதாப நிலையை இன்றைய சர்க்கார் கவனிக்குமா? குறிப்பாகச் சொல்லப்போனால் இப்பேர்ப்பட்ட சம்பவம், இராமநாதபுரம், திரு நெல்வேலி ஜில்லாக்களில் அதிகம் நடமாடுகிறது. அதிலும், இலங்கை வருமானத்தையே எதிர் பார்த்திருக்கும் "கீழக்கரை" போன்ற பகுதிகளில் விசேஷமாக நடமாடுகிறது.

ஆகவே, அரசாங்கம் இந்த விஷயத்தில் சற்றுக் கவனம் செலுத்தி அந்த 29நம்பர் பாரத்தில் கண்ட விபரங்களை அதற்குச்சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உண்மையுடன் விசாரணை செய்து, எண்ணற்ற ஏழைக் குடும்பங்களின்பசித்தேக்கம்பிடித்த பாட்டாளி மக்களின் நல்வாழ்விற்கு ஆக்கம் செய்வார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

"உண்மை விளம்பும்
ஓர் கீழக்கரைவாசி"

* * *

தீ இலாகா

ஐயா!

இந்நாள் வரை தனி நிர்வாக இலாகாவாயிருந்த தீயணைப்பு இலாகா, நாளது அக்டோபர் மாதம் முதல் போலீஸ் படையுடன் இணைக்கப்பட்டு விடும். இங்விலகா இரண்டாவது உலக மகாயுத்தத்திற்கு முன்பு செவ்வனே அமைந்திருக்கவில்லை. யுத்தபீதி கிழக்கே பரவத் தொடங்கியபோது இவ்விலாகா தோன்றி, சென்னை நகரத்தைத்தவிர பல முக்கிய முனிசிபல் நகரங்களிலும் விஸ்தரிக்கப்பட்டது. விசேஷ பயிற்சிபெற்ற இவ்விலாகா உத்தியோகஸ்தர்கள் இதை நல்ல முறையில் நடத்திவந்து, பொதுஜன அபிமானத்தையும், ஆதரவையும் பெற்றுவிட்டார்கள். ஆனால் இரண்டு வருஷங்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட "ஆளெடுப்புகமிட்டி" யின் விசித்திர யோசனையின் காரணமாக, (பணச்சிக்கனம் காரணமாக) இவ்விலாகாவைப் போலீஸ் படையுடன் இணைக்க சர்க்கார் சம்மதம் தந்தனர்.

இவ்விலாகாவின் விஷயங்களை நன்கு அறியாத ஒரு கமிட்டியார் கூறிய யோசனையை, அப்படியே கைக்கொள்வது சரியாகாது. மந்திரி கனம கோபால்ரெட்டி அவர்கள் 16-3-'49 அன்று, அசெம்பிளியில் இவ்விலாகாவைப் பற்றிய கேள்விகட்குப் பதிலளிக்கையில், "இவ்விலாகாவின் நிர்வாகமே ஒரு தனி ரகம், இவ்விலாகாவை போலீஸ் இலாகாவுடன் இணைப்பது நல்ல நிர்வாக முறையைப் பாதிக்கும். இவ்விலாகாவை இன்னும் விஸ்தரிக்க இடமுவளது. ஆகையால் நிபுணர்களைக் கொண்டில்லாத ஒரு கமிட்டியின் யோசனையை நிறைவேற்ற இயலாது" என்று செப்பினர். மார்ச்சுமாதம் கட்சித்தலைவர் என்றவேறாதாவில் அவர்கூறியவை மே மாதம் அடியோடு மாறிவிட்டது. இது என்ன விந்தை!

பொதுஜன அபிவிருத்தி ஆர்வமுள்ளவராயும், நிர்வாக விஷயங்களில் மேதைதன்மையுமுள்ள நிபுணர்களைக்கொண்ட ஒரு 'விசேஷ கமிட்டி'யை நிறுவி இவ்விலாகாவைத் திருத்தியமைக்கும் வேலையை அக்கமிட்டியின் பால விட்டுவிடுதல் நன்கு பயனளிக்கும். இவ்விசேஷ கமிட்டியின் சிபார்சுகள் ஆளெடுப்பு கமிட்டியின் சிபார்சுகளைவிட, உயர்ந்த ரகமானதாகவும், பொதுஜன அவநம்பிக்கையை குறைக்க வல்லதாகவும் இருக்குமென்பதில் ஐயமில்லை. அமைச்சர் துரிதமாக ஆவன செய்வார்களா?

"ஓர் அன்பன்"

* * *

தென்னிந்திய ரயில்வே தொழிற் சங்கம் கிளை - பழனி

ஐயா,

பழனி ரயில்வே தொழிற்சங்கத்தின் காரியதரிசி வரைந்தது. மாகாணம் முழுவதும் சிறைசாலைகளில் உள்ள விவசாய, மாணவர், தொழிலாளர்கள் தலைவர்கள் மீது இன்றைய அரசாங்கம் தடியடி, துப்பாக்கிப்பிரயோகம் செய்ததைக்கண்டித்தும், மாகாண தொழிற் சங்கக்காங்கிரசின் தலைவர் தோழர் சக்கரைச செட்டியாரின் வேண்டுகோளின் படியும் கடந்த 20—8—49ல் ஒரு நாள் கண்டன வேலை நிறுத்தம் இவ்விடம உள்ள ரயில்வேத் தொழிலாளர்கள் செய்தார்கள். இதை முன்னிட்டு கடந்த 31—8—49 தேதி முதல் லோகோ ஷெட்டில் மலபார் ரிசர்வ் போலீசாரைக் கொண்டு வந்து வைத்து இருக்கிறார்கள். நகரத்தில் உள்ள சர்க்கில் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் முதலியவர்கள் ரயில்வே அதிகாரிகளுக்குப் பதிலாக அவர்களே நேரிடையாக தொழிலாளர்களுக்குக் குற்றப்பத்திரிகையைக் கொடுத்தார்கள். இந்நிகழ்ச்சி சரித்திரத்தில் கண்டிராத சமபவம். ஏன் எல்லோரையும வேலையை விட்டு நீக்கக் கூடாது என குறைப் பத்திரிகையில் குறிக்கப் பட்டுள்ளது. மேலும் தாலுகாவில் உள்ள ஆயக்குடி, ஒவலாப்புரம், கணக்கன்பட்டி, வேலூர், சத்திரன்பட்டி, ஒட்டன்சத்திரம் போன்ற கிராமங்களில் மலபார் போலீசார் சென்று நூற்றுக்கணக்கான விவசாயிகள் ஆண், பெண்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்து பலருடைய வீட்டை தீ வைத்து விட்டார்கள். பலருக்குக் கைகால்கள் முறிக்கப்பட்டன. ரயில்வே தொழிற்சங்கத்தின் மீது பறந்துகொண்டிருந்த செங்கொடியை அவிழ்த்துக் கொண்டு, மரத்தைத் தள்ளி விட்டார்கள். எங்கும் 144 கொடிய அடக்குமுறை அவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. சுமார் 50க்கு மேற்பட்டத் தோழர் கைது. இந்த அடக்கு முறைக் கொடுமை நீங்க வழியுண்டா?

சே. வீரையன்.
காரியதரிசி, தெ. இந்தியரயில்வே
தொழிற்சங்கம் பழனி 10-9-49.

திருத்தம்

சென்னை 13—9—49, வெளியூர் 14—9—49 "மாலைமணி" இதழில் "ஆசிரியருக்கு முடங்கல" என்ற தலைப்பின் கீழ் வந்த கடிதத்தின் அடியில் இப்படிக்கு, ஜி. அப்பாதுரை, திருச்சி, 9—9—49 என்று சேர்த்து வாசித்துக் கொள்ளவும். (ஆ-ர்).

திராவிடர் இயக்கப் பொதுக்கூட்டம்

திராவிடத்தின் எதிர்கால வேலைத்திட்டம் பற்றி

பெத்தாம்பாளையம் பழனிச்சாமி தலைமையில்

தோழர்கள்:

பாரதிதாசன்	N. ஜீவரத்தினம்
K.K. நீலமேகம்	C. P. சின்னராஜு
C. N. அண்ணாத்துரை	K. அன்பழகன்
A.V.P. ஆசைத்தம்பி	M. கருணாநிதி
K.V.K. சாமி	தங்கப்பழம்
A. சித்தைய்யன்	E. V. A. வள்ளிமுத்து
பராங்குசம்	மதுரைமுத்து
E.V.K. சம்பத்	N. M. சுப்ரமண்யம்
S. R. சுப்ரமண்யம்	C. D. T. அரசு
N. V. நடராஜன்	மணிமொழியார்
காஞ்சி. கல்யாணசுந்தரம்	சத்தியவாணிமுத்து
R. நெடுஞ்செழியன்	K. A. மதியழகன்
M. K. T. சுப்பிரமணியம்	முருகு. சுப்ரமண்யம்
T. K. சீனிவாசன்	M. S. மொய்தீன்

ஆகியோர் பேசுவார்கள்

இடம்:-சென்னை ராயபுரம் ராபின்ஸன் பார்க்.

காலம்:-18-9-49 ஞாயிறு மாலை 4-மணிக்கு

K. [illegible], அமைப்பாளர்

பள்ளி தேவையா ?...

(1-ம் பக்கத் தொடர்ச்சி ;

இருக்கிறார்கள்! எண்ணத்தொலையாதவர்கள் இருக்கிறார்கள்! வீரர்கள் உண்டு! வீராங்கனைகள் பலர் உண்டு! பட்டியல் வேண்டுமா அமைச்சரே-கூறுங்கள்!

தாங்கள் அமைச்சர்! தங்களுக்கு வேண்டாம் அந்தப்பணி. நாங்கள் இருக்கிறோம், சிறுவர்களைப்பார்த்து இரக்கம் காட்ட- இரத்தக் கண்ணீர் சொரிய- எடுத்து காட்டிலேகூற!போதாது அமைச்சரே- இது மட்டும் போதாது!

கல்கத்தா இருட்டறையில் அடைத்து வைத்து அல்லல் கொடுத்ததுபோல்- ஆடு மாடுகளைச் சிறு பட்டியில் அடைத்துப் போட்டு இங்கிழைப்பது போல்- மாணவச் சிறுவர்களை, பள்ளி என்று கூறப்படும் சிறு பட்டியில் போட்டு அடைத்து, இம்சிக்கும் கொடியவர்கள் யார் யார்- அமைச்சரே கூறுங்கள்! அந்த அக்கிரமக்காரர்களுக்கு தண்டனை கொடுக்க- அந்த நிலையை மாற்றி அமைக்க-அதற்கான அதிகாரம்- ஆற்றல்- அந்தஸ்து- அனைத்தும், யாருக்கு இருக்கிறது அமைச்சரே, ஆத்திரப்படாமல் கூறுங்கள்! நிலைமையை நன்கு விளக்கினீர்! போதுமா அதுமட்டும்? தங்கள் கடமை அத்துடன் தீர்ந்து விடுமா? விடாதே அமைச்சரே, தாங்கள் ஒரு அமைச்சராக, அதுவும் கல்வி அமைச்சராக இருக்கிற காரணத்தால்!

ஆடுமாடுகளைத் துன்புறுத்துவோர் மீது, குற்றஞ்சாட்டி நீதிசபைக்கு அழைக்க, எங்களுக்கு -பொதுமக்களுக்கு-மாணவச் சிறார்களின் பெற்றோர்களுக்கு, ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால், அமைச்சரே, எவர், குற்றவாளி கூண்டில் கைகட்டி வாய் பொத்தி நிற்கும் நிலை பெறுவர்? கூறுங்கள்-அமைச்சரே, கூறுங்கள் கோபப்படாமல்!

ஆம்! ஆளவந்தார்கள் நிற்க வேண்டும்! அவர்கள் நிர்வாகப்-இல்லை-தர்பார், நாட்டை அந்த நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறது. பட்டியிலே அடைத்த மாணவச்சிறார்கள்போல், நாட்டு மக்கள் எல்லாத் துறைகளிலும், 'தேவை தேவை' என்ற கூக்குரல் எழுப்பி, கேளாக்காதில் விழும் நிலைகண்டு, சோகத்தில்- துன்பத்தில் சிக்கிச் சீரழிந்து, வாழ்விழந்து, நடைபிணங்களாகி வாழ்கிறார்கள்! இப்பொழுது கூறுங்கள். யார் நிற்கவேண்டும் குற்றவாளி கூண்டில் என்று! துன்பத்திற்குள்ளாகும் பொதுமக்களா?-துன்பமிழைக்கும் ஆளவந்தார்களா என்பதை!

ஆளவந்தார்களின் ஆவாகத்தில்நாட்டிலுள்ளபள்ளிகூடங்கள் வெறும் ஆடு மாடு அடைக்கப்படும் கொட்டில்களாக இருக்கிறதாம். நிலைமை எடுத்துக் காட்டும் அமைச்சர், இதனை மாற்ற என்ன நடவடிக்கைகளை இது வரையில் எடுத்துக்கொண்டார்- பதில் ஒன்றுமில்லை! இத்துன்பத்தைத் துடைக்க இனி தான் என்ன முறைகளை மேற்கொள்ள இருக்கிறார் - இதற்கும் பதில் ஒன்றுமில்லை!

'ஒன்றுமில்லை!' இதனைக் கூற அமைச்சர்கள்! வெட்கம்- வேதனை! துன்பத்தைக் கூறுவார்கள்- துன்பம் துடைக்க ஒன்றும் செய்யார்கள்! துன்பத்தைக் கண்டு கோபிப்பார்கள்- கண்ணீர் விடுவார்கள், நாட்களை எண்ணிக் கொண்டு காலத்தைத் தள்ளுவார்கள்! அமைச்சர்களின் பணியின் போக்கு. இது! வெட்கம்- வேதனை, எதுவுமில்லை அமைச்சர்களுக்கு!

ஆளவந்தார்களின் நிலை இது! பொதுவாக நாட்டு மக்களுடையவும் குறிப்பாக சட்டசபை உறுப்பினர்களுடையவும் நிலை என்ன பார்ப்போம்.

திருச்சியிலே கும்பாபிஷேகம். திருநெல்வேலிச் சீமையிலே இராஜகோபுரம் அமைத்தல். இது மட்டும் போதுமா அவசியமா-நாடு முன்னேற?

காஞ்சிபுரத்திலே ஒரு பள்ளி இருந்து வருகிறது. வாடகைக் கட்டிடத்தை காலி செய்தாகி விட்டது. அந்தப்பள்ளிக் கூடத்தை இரண்டாகப் பிளந்து, ஓலை குடிசையில் நடத்தப்பட்டு வந்தது. இதனை அங்குள்ள மக்கள் அறிவர்.

நகர சபையின் தலைவர் டாக்டர் சீனிவாச ஐயர். அவர் ஒரு காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர் - அந்தப்பள்ளி, இல்லை,- கல்வி அமைச்சர் கூறினதுபோல்- மாட்டுக்கொட்டில், சீரமைப்புக்குக் கவனம்செலுத்தினார் இல்லை. ஆனால், அவர் நகர சபையின் தலைவர்! நகர சபையின் நிர்வாக அதிகாரியின் கண்களில் இது படவில்லை என்று சொல்லி விட முடியாது. அவரும் குருடானார் -செவிடானார்-முடமானார்!

கவுன்சிலர்களோ, தலைவரையும், நிர்வாக அதிகாரியையும் தோற்கடித்து விடக்கூடியவர்கள். பள்ளிக்கூடம் பாழடைந்து கிடக்கிறது. படிக்க இடமில்லாமல், குட்டிச்சுவரிலே முட்டிக்கொள்ளுகிறார்கள் சிறுவர்கள். இந்தக் காட்சியால், அவர்கள் செந்தேள் கொட்டிய நிலையும் பெறவில்லை, கருணை உள்ளமும் கொள்ளவில்லை. ஏதோ பணமில்லை, எனவே மனம் இல்லை. என்று கூட, அவர்களைப்பற்றி குறை கூறாமல் இருந்து விடலாம். அப்படியும் அவர்கள் இருந்துவிடவில்லையே!

வைகுண்டவாசத்தில வெறுப்படைந்து, பூலோகத்தில் குடிபுக, சின்னத்திருவடியைத் தூது அனுப்பி, ஒரு மணிமண்டபத்தை வசதியுடையதாக நிர்மாணிக்கச் சொல்லி, காஞ்சிபுரம் வர ஸ்ரீமந் நாராயணன் திருவுளம் கொண்டான்! நாராயணன் கட்டளைய எப்படி மீறுவது?

எனவே மணிமண்டபம் எழுப்பப்பட்டது. மதச்சார்பற்ற சர்க்கார் என்பதைக் காட்டிக்கொள்வதற்காக தேசீயக்கொடியும் ஏற்றிவைக்கப்பட்டது, நகர சபைத் தலைவரால்.

பூலோக வைகுந்தத்தைத் திறந்து, வைகுந்தவாசனைக் குடிபடைகளுடன் அழைத்துவந்து, குடிபுகுத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார் நகரசபை கமிஷனர்!

இந்தப் பெரும் பணியை உங்களால் எல்லாம் செய்ய முடியுமா? வகிக்கும் பதவியின் கடமை தெரிந்து, எவ்வளவு நாட்டுக்குத் தேவையான நல்ல காரியங்களை, மக்கள் பிரதிநிதிகள் செய்து முடிக்கிறார்கள் பார்த்தீர்களா? இந்த நாடு உருப்படுமா?

படிக்கும்பிள்ளைகளுக்கு மாட்டுக் கொட்டில்- பரந்தாமனுக்கு மணி மண்டபம்!

மக்கள் பிரதிநிதிகள் செய்யும் பணி இது. மந்திரிகளோ, மாணவர் நிலை கண்டு, கலக் கோயில் நிலைகண்டு, கண்ணீர் வடிக்கிறார்கள் கதியற்றவர்கள்போல்! நல்ல அமைச்சர்கள்- நல்ல பிரதிநிதிகள்- நல்ல நாடு!

பழைய சோறு புசிக்கத்தந்தால் பசியாதிருக்கும் வரம் தருவேன்

பள்ளி ஆசிரியர்களுக்குக் கல்வி மந்திரி கூறும் யோசனை

சென்னை மாகாணத்தின் மொத்த வருமானமாகிய 46 கோடி ரூபாயில், கல்விக்கென்று $11\frac{1}{4}$ கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இவை இப்போதைய நிலையில் சரிப்பட்டு விடுகிறபடியால், ஆசிரியர்களின் சம்பள விகிதத்தை உயர்த்தவேண்டுமெனின், இதற்காக மற்றும் 50 லட்சம் ரூபாய் அதிகத் தேவை ஆகுமென்றும், இதற்குப் பணம் இல்லையென்றும், சம்பள உயர்வு கேட்கும் ஆசிரியர்கள், பணம் வரும் வழியையும் கூற வேண்டுமென்றும், கல்வி மந்திரி சித்தூர் மாவட்ட பள்ளி ஆசிரியர் மாநாட்டில் கூறினார். ஆசிரியர்கள் பண வருவாய்க்கு வழி அறிந்தால், ஆசிரியர் வேலைக்கு ஏன் வருகிறார்கள்? அந்த வழியை மந்திரிக்குத்தான் ஏன் கூறுகிறார்கள். "பழைய சோறு இருந்தால் புசிக்கச் சற்றுக் கொடுங்கள்- பசியாதிருக்க வரம் தருகிறேன்" என்று கூறிய மகரிஷியின் பரம்பரையில் வந்தவர் போலவன்றோ கல்வி மந்திரி, வயிறார உண்ணும் அளவுக்கு ஊதியத்தை உயர்த்தித் தருமாறு கேட்கும் ஆசிரியர்களிடமே "பணம் வரும் வழியைக் கூறினால் பணத் தேவையை நிவர்த்தி செய்கிறேன்" என்று கூறுகிறார். அற்புதமான கருத்தை வெளியிட்டார் கல்வி மந்திரி.

இந்த அழகிலே இன்னும் 4000 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனராம். புதிதாகத் திறக்கப்பட்டுள்ள 307 பள்ளிக்கூடங்களில், ஆசிரியர் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாம். இப்பஞ்சத்தைப் போக்க, ஆசிரியத் தொழிலில் பயிற்சிதர. இன்னும் 4 பயிற்சிக் கலாசாலைகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்! எல்லாம் சரி, ஆசிரியர்களுக்குத் தக்க ஊதியம் தரவேண்டுமென்பதை ஏன், கல்வி மந்திரியோ, அவர் அரசாங்கமோ உணரச் சக்தியற்றனர்? அதிலும்கூடத் தமிழாசிரியர்கள் இன்றளவும் பிற ஆசிரியர்களை விடக் குறைந்த சம்பளம் கொடுக்கப்படும் கொடுமைக்குள்ளாக்கப் பட்டிருப்பதனைப் போக்கவாவது இந்தக் கல்வி மந்திரி முன்வந்தாரா? ஆசிரியர்களிடை ஏன் இந்த வேறுபாடு காட்டப்படவேண்டும்? 10வது வகுப்பு மாணவனுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் வாங்கும் சம்பளமே, தமிழ் கற்பிக்கும் ஆசிரியருக்கும் தருவதில் தமிழ்நாட்டின் அரசாங்கத்திற்கோ, கல்வி மந்திரிக்கோ மனம் வரவில்லையென்றால், இந்த அநீதிக்குப் பரிகாரம் எங்குப் போய்த் தேடுவது?

இலயோலா கல்லூரியில் பாரதிவிழா

சென்னை, செப். 10—

9-9-49 இலயோலா தமிழ் மன்றம் 'பாரதிவிழா' கொண்டாடியது செயலாளர் ஜனார்த்தனன் எல்லோரையும் வரவேற்று, மாணவத் தோழர் சுவாமி ஆறுமுகம் அவர்களை விழாவுக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்க வேண்டிக் கொண்டார். சுவாமி ஆறுமுகம் அவர்கள் தலைமையில் தோழர் மா. பொ. சிவஞானம் அவர்கள் பாரதியைப்பற்றிப் பேசினார்கள். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பாரதிபோன்ற கவி இந்தியாவின் வேறு எந்த மாகாணத்திலும் தோன்றவில்லை. என்போன்ற ஏகாதிபத்தியத்தை விரட்டிய வீரர்களுக்கு வாளெடுத்துக்கொடுத்தார் பாரதி. பாரதி இந்தியாவைமட்டும் பாடவில்லை. உலகத்தையே பாடி இருக்கிறார். ரஷ்யப்புரட்சியை வெகு அழகாக வர்ணித்திருக்கிறார் பாரதி துன்பப்பட்டவர் எல்லோரைப்பற்றியும் பாடினார். பாரதி ஒரு மக்கட்கவி. மக்கட்கவி என்றால் மக்களின் துன்பத்தைத் தனது துன்பமாக எண்ண வேண்டும். மக்களின் எண்ணமெல்லாம் தனது எண்ணமாக இருக்க வேண்டும். புரட்சிப் பெண்ணைப்பற்றி பாரதி பாடும்போது புதுமையின் ஆக்கத்தையும் பழமையின் அழிவையும் பாடுகிறார். மூடநம்பிக்கைக்கு இறுதிச்சங்கை முழங்கினார்" என்று குறிப்பிட்டார். பிறகு செயலாளர் க. பழனிவேலு நன்றி கூற விழா இனிது முடிந்தது. எனச்செயலாளர் எழுதுகிறார்.

மதம் பிடித்த யானையின் அட்டகாசம்

கம்பம், செப், 9.

கம்பம் "கிராண்டு பெய்ரி சர்க்கஸில், உள்ள யானை ஒன்று 8-9-49ல் நேற்றயிலிருந்து மதம் பிடித்து நேற்று சர்க்கஸில் வேலைபார்த்து வந்த ஒருவரை மிதித்து காயப்படுத்தியும்' கொட்டகையை விட்டு வெளியேறி காம்பில் பல சேதங்களை உண்டு பண்ணியும் இன்று காலையில் 45 குண்டுகளைச் சுட்டும் சாகாமல் கடைசியில் 76வது குண்டில் தான் இறந்தது. 1000க் கணக்கான மக்கள் கூட்டம் கண்டு செல்கின்றனர். போலீஸார் தீவிரமுயற்சினாலேயே கொல்ல முடிந்தது காவில்சங்கிலியில்லாமல் இருந்தால் ஊருக்கே ஆபத்துதான்வந்து இருக்கும். ந. சி.

மாஜி பட்டாளத்தார் சங்கம்

குடந்தை, செப். 10—

தஞ்சைஜில்லா மாஜி பட்டாளத்தார்களின் ஜெனரல்பாடி கூட்டம் 28-8-49-ம் நாள காலை குடந்தையில் தம்பியார் சேர்வைக் கட்டிடத்தில்கூடி பல தீர்மானங்களை நிறைவேற்றிற்று எனபொதுச் செயலாளர் தோழர் ஆர். சிவகுமாரன் எழுதுகிறார்.

"மாலை மணி"

(திராவிடர் தமிழ்த் தினசரி)

வருட சந்தா	15—0—0
6-மாத „	7—8—0
3-மாத „	3—12-0

மானேஜர்

அறிவிப்பு

ரெடீஜ முட்டை யூடர். முட்டைப்பூச்சி எறும்பு முதலியவைகளை நாசஞ்செய்ய அபர்ந்த நிந்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணு ஸ்டாம்பு அனுப்பவும். G. மருவியப்ப முதலியார், மதுரை.

சிறந்த நூல்கள்.

அறிஞர் அண்ணு நூல்கள்

தேவலீலைகள்	0—8—0
மகாகவி பாரதியார்	0—6—0
மூலபலம் முறிகிறது	0—8—0
அறநிலையங்கள்	0—6—0
பொருள்	0—4—0
மறுமலர்ச்சி	0—4—0
அண்ணு பேச்சு	
வெற்றிரகசியம்	0—3—0
மு. கருணநிதி	
சங்கிலிச்சாமி	0—8—0
பலிபீடம் நோக்கி	0—6—0
அறப்போர்	0—3—0
கயிற்றில் தொங்கிய கணபதி	0—3—0
இராதாமணளன்	
துளி தேன்	0—8—0
மதம அவசியமா ?	0—3—0
காதல்புரிவது எப்படி?	0—6—0
நேதாஜி உயிரோடு இருக்கிறா ?	0—3—0

வியாபாரிகட்கு 25% கழிவு, செலவு இனம.

தனிப் பிரதி வேண்டுவோர் புத்தக விலைக்கு தபால் தலைகள் அனுப்புக.

அறிவுப்பண்ணை,
6, மங்கம்மாள் தெரு,
ஏழுகிணறு. சென்னை-1.

"அழியட்டுமே திராவிடம்" தேடுகின்றனர்

துறையூர், செப். 12—

"அழியட்டுமே திராவிடம்" என்ற நூலின் பதிப்பாசிரியர்கள் மீது ஆட்சியாளர் I.P.C. 153 A. பிரிவின்படி வழக்குப்பதிவு செய்ய முடிவு செய்துள்ளனர் என்று தெரியவருகிறது. டி நூலின் ஆசிரியர் திரு. து. வீ. நாராயணன் அவர்கள் இறந்து சில ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர்மேல் வழக்குத் தொடர வசதியற்ற நிலையில் டி பதிப்பாசிரியர்மீது பாய்கிறது. டி பதிப்பாசிரியர்களில், ஒருவரான தோழர் டி. கே. தங்கவேலு அவர்கள் வீட்டையும், கடையையும் 9-9-49-ம் நாள் மாலை 4-மணி தொடங்கி 5-30-மணிவரை முசிறி வட்ட போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், துறையூர் போலீஸ் ஆக்டிங் சப் இன்ஸ்பெக்டர், மதுவிலக்குச் சப்இன்ஸ்பெக்டர் மற்றும் அவர்களது பரிவாரங்கள் சகிதம் பரிசோதித்து "அழியட்டுமே திராவிடம்" நூல்கள் 4. டி நூலின் மேலட்டை, "சாந்தியார் சாந்தியடைய"(திருA.V.P.ஆசைத்தம்பி எழுதியது), ஆகிய இவைகளைக் கைப்பற்றிச்சென்றுள்ளனர். மேலும் டி பதிப்பாசிரியரை அவர்கள் விரும்பும் சமயம் ஆஜராகும்படி எச்சரிக்கை செய்துவிட்டுச் சென்றுள்ளனர். இது சம்மந்தமாய் மற்றும் பலர் மேல் வழக்கு பதிவு செய்யலாமெனத் தெரியவருகிறது எனக்கழகச்செயலாளர் தோழர் து. மா. பெரியசாமி எழுதுகிறார்.

தேவை

நமது அச்சகத்திற்கு நல்ல நிலைமையில் உள்ள டபுள் டிமமி சிலண்டர் மிஷின் ஒன்றுதேவை. விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press. 2/45, Muthumari Chetty Street. Madras-1.